LIBRARY
18 APR 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 10th March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTION.

Metric system

*711 *Q.*—SRI **S. M. ANNAMALAI** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மெட்ரிக் முறையை மக்கள் புரிந்து கொள்வதற்காக சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) மெட்ரிக் முறையின் படிக்கற்கள் தயார்செய்ய எத்தனை பேர்களுக்கு லைசென்சு வழங்கப்பட்டுள்ளது?

(உ) படிக்கற்களின் ஒரு செட்டின் (Set) விலையென்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Steps were taken to give wide and concentrated publicity to the metric system such as advertisement in papers, free supply of pamphlets, conversion tables, posters and hand-bills, etc., to the public, holding of publicity weeks, exhibition of cinema slides in theatres and distribution of demonstration sets of metric weights to all Block Development and Information Centres.

(*b*) Ninety-one (91) manufacturers.

(*c*) There is no control of price over metric weights. A set of cast iron weights consisting of 100 gram to 50 kilogram costs about one hundred and twenty-eight (128) rupees.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த முறையானது எந்தெந்த மாவட்டங்களிலே கட்டாயமாக அமுலுக்கு வரும்? படிக்கற்கள் விற்பனையை ஏன் கண்ட்ரோல் செய்யக்கூடாது? விலை அதிகமாக இருக்கிறதே?

THE HON. SRI M. A. MANICKAVELU : கட்டாயமாக இது நாலு ஜில்லாக்களில் அக்டோபர் 1960-லிருந்து அமுலுக்கு வந்தது—மதராஸ், செங்கல்பட்டு, தென் ஆற்காட், வட ஆற்காட். இது ஏப்ரல் 1960-லிருந்து மாகாணம் பூராவும் அமுலில் இருக்கிறது, ஆனால் கட்டாயம் இல்லை. கட்டாயமாக ஏப்ரல் 1962-லிருந்து அமுலுக்கு வரும். இந்த கற்கள் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகப் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

[10th March 1961

Sri S. M. ANNAMALAI : ஸார், இப்பொழுது பல வகைகளில் ப்ளாக் டெவலப்மெண்ட் ஸெண்டர்ஸ், பத்திரிகைகள், இவைகள் மூலமாக விளம்பரம் செய்யப் பட்டதாகச் சொன்னார்கள். அப்படிச் செய்தும் கூட, அது மக்களுக்குப் புரியவில்லை. அவர்கள் இன்னும் வீசை, பலம் என்றுதான் கேட்கிறார்கள். ஆக இந்த மெட்ரிக் முறையை அக்டோபரிலிருந்து அமுல் செய்வதற்குப் பதிலாக, நாலு, ஐந்து மாதங்கள் ஒத்திப் போட்டுச் செய்ய முடியுமா? இன்னும் நயா பைசா குழப்பமே தீர்ந்தபாடில்லையே. ஆகவே இதை இன்னும் கொஞ்சம் ஒத்திப்போட சர்க்கார் முன் வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : நயா பைசா குழப்பம் இப்போது தீர்ந்து விட்டது. ஆரம்பத்தில் குழப்பம் இருந்தது உண்மைதான். அதே போல இதிலும் ஆரம்பத்தில், இந்த ட்ரான்ஸிஷனல் ஸ்டேஜில் குழப்பம் இருக்கும்; அது கொஞ்சம் கொஞ்சமாகப் போய்விடும்.

Sri V. SUBBIAH : இந்த ஏற்பாட்டினால் இருக்கும் குழப்படியான நிலையைப் போக்க அந்தந்த ஜில்லாக்களில் பிரசாரத்திற்காக இன்ஸ்பெக்டர்களெல்லாம் நியமனம் ஜல்தியாகச் செய்ய உத்தேசம் உண்டா?

The Hon. Sri M. A. MANICKAVELU : திட்டப் பிரகாரம் உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்திச் செய்யப் பிரயத்தினம் செய்யப் படுகிறது. அந்த நாலு ஜில்லாக்கள் தவிர இதர ஜில்லாக்களில் கட்டாயம் இல்லை. 1962-க்குப் பிறகுதான்.

Sri P. G. MANICKAM : மெட்ரிக் முறையே பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க, கணக்குப் புத்தகங்களில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படிச் செய்யப்படவில்லை என்றால் அந்த மாற்றம் செய்யப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : அவர்களுக்கும் அப்படிச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்.

Sri S. M. ANNAMALAI : ஸார், இந்தப் படிக்கற்கள் சம்மந்தமாக கட்டுப்பாடு இல்லாததால், ப்ளாக் மார்கெட்டில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அவைகளை குறிப்பிட்ட விலையில் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள் என்பதனால், எடைக் கற்களை ப்ரைஸ் கண்ட்ரோல் செய்து, வழங்க நடவடிக்கை எடுத்து கேட்கிறவர்கள் அனைவருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : அப்படி அதிக விலைக் குத்தான் கிடைக்கிறது என்ற தகவல் என்னிடம் இல்லை. இது சீக்கிரம் அமுலுக்கு வராமல் இருப்பதற்காக அம்மாதிரிக் கிடைக்க வில்லை என்று புகார்கள் செய்கிறார்களோ என்னவோ.

10th March 1961]

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that in the districts where it is compulsory, still old measures and old weights are used and if so, will the Government take vigorous measures to enforce it?

THE HON. SRI M. A. MANICKAVELU : We cannot be very drastic in this matter. As one hon. Member has stated, there is a little kind of confusion. There is also confusion even in our own mind. So, how can we expect the villagers to switch-over to it? We have to do it in a phased manner as smoothly as possible.

Officers drawing over Rs. 1,000

* 712 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the total number of officers in the State whose salary is above Rs. 1,000 including all allowances?

THE HON. SRI C. SUBRAMANIAM : The total number of officers in the State whose salary is above Rs. 1,000 are 268 as detailed below :—

In Madras City (excluding officers working under the State Electricity Board, Khadi and Village Industries Board and Madras State Port Department)	184
In mufassal	84
Total ...	268

SRI T. T. DANIEL : In view of the fact that there are only a few such posts in our State, may I know whether there is any proposal to increase the number of such posts so as to attract worthy talents and the State can benefit by such talents for implementing development schemes?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I.A.S. officers and I.P.S. officers have got prescribed scales of pay and according to these scales of pay they get their salaries and most of them have got opportunities of getting Rs. 1,000 and more.

SRI S. LAZAR : Sir, was there any increase effected after the recent report of the Pay Commission. Also is it a fact that there is a complaint that the pay of these officers does not compare favourably with the pay that is available in private concerns?

THE HON. SRI C. SUBRAMANIAM : Particularly in a developing economy with industrial development, I do not think the Government can compete with the private industry.

SRI M. KALYANASUNDARAM : ஸார், சீப் எஞ்ஜினியர் ஜெனரல், சீப் எஞ்சினியர் ஹைவேஸ் இவர்களெல்லாம் அதிகச் சம்பளம் வாங்கும்போது, சீப் எஞ்ஜினியர் எலெக்டிரிஸிடி மாத்திரம் சம்பளம் குறைவாக வாங்கக் காரணம் என்ன?